


# நான் எனப்படும் நான்

--- ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா



*நான் எனப்படும் நான் : 001*

மனிதர்களை நான் மன்னிக்கிறேன். தினம் தினம். அப்படி மன்னித்த ஒருவரை சில வருடங்களுக்கு பிறகு பார்க்க நேர்ந்தது. அவர் பேச ஆரம்பித்தார் ...

" பேசுவாயோ மாட்டாயோ என்று நினைத்து இருந்தேன். பரவாயில்லை பேசுகிறாய். நான் அப்போது செய்தது தவறுதான். அதை இப்போது உணர்கிறேன். " என்று பேச்சு நகர்ந்தது.

நான் சிரித்துவிட்டு தொடர்ந்தேன் ...
" எப்படி இருக்கிறாய் ? ".

" நன்றாக இல்லை. அதற்க்கு பல காரணம் இருந்தாலும் நீ சொன்னதை நான் கேட்காதது முக்கிய காரணம்.
உன்னிடம் நான் செய்த வாதம் இன்று வீணாய் நிற்பதை

உணர்கிறேன். உன்னிடத்தில் என்னை வைத்து யோசித்தால் நான் மீண்டும் பேசவே மாட்டேன் "

நான் புன்னகைத்தேன்.

" அப்போது வெற்றி அடைந்த மாதிரி எனக்கு ஒரு உணர்வு. ஒரு சில பொய்களில் உன்னை பற்றிய வேறு ஒரு பிம்பத்தை ஏற்படுத்தி .... இப்போது நினைத்தாலும் மனதிற்கு வருத்தமாய் இருக்கிறது. அப்படி நான் சொல்லி இருக்க கூடாது. நிஜமாய் உணர்கிறேன். " அவரின் கண்களில் நெகிழ் நீர் தெரிய நான் துடித்துப்போனேன்.

" அது நடந்து பல வருடங்களுக்கு மேல் ஆயிற்று. அது என் மனதிலேயே இல்லை. இப்போது உன்னை பார்த்த பின், நீ பேசிய பின்தான் அதெல்லாம் ஞாபகத்திற்கே வருகிறது. என்ன செய்து கொண்டிருக்கிறாய் ? " நான் அவரை நிகழ் காலத்திற்கு கொண்டு வர முயற்சித்தேன்.

" ஏதோ இருக்கிறேன். நான் செய்த தவறுகள் என்னை வாட்டுகின்றன. அப்பா அம்மாவிற்கு நான் உண்மையாய் இல்லை. மனைவிக்கு உண்மையாய் இல்லை. வேலைக்கு உண்மையாய் இல்லை. நட்பு வட்டத்திலும் சுயநலம் பார்த்து பலரை இழந்தேன். அநாதையை போல் இருக்கிறது என் வாழ்வு " என்றார்.

நான் அமைதியாக இருந்தேன். தவறுகள் செய்யும்போது கிடைக்கும் தைரியம் ஏன் நமக்கு செய்தது தவறு என வருந்தும்போது கிடைப்பதில்லை. முறைப்படி தவறு செய்யும்போது தைரியம் இல்லாமலும், திருந்தும்போது தைரியமாகவும்தானே நாம் இருக்க வேண்டும் ?

" உன்னை பார்த்து பேசியதில் எனக்கு மனசுக்கு கொஞ்சம் ஆறுதல். பேசாமல் சென்றிருந்தால் மிகவும் வருத்தம் அடைந்திருப்பேன் " அவரின் பேச்சு தொடர்ந்தது.

" உன்னை பார்த்ததில் எனக்கு மகிழ்ச்சி. கடந்த காலங்களை நான் சுமப்பதில்லை. நீயும் சுமக்க வேண்டியதில்லை. தவறு என நீ உணர்ந்த கணமே அது உன்னிடமிருந்து வெளியேறிவிடும். நிம்மதியாக இரு. என் தொலைபேசி எண்ணை அனுப்புகிறேன். தொடர்பில் இரு " என்று சொல்லிவிட்டு சிரித்தேன்.

அவரின் முகம் கொஞ்சம் மலர்ந்ததை பார்க்க முடிந்தது. அவர் நடக்க ஆரம்பித்து என்னில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தார். பழைய நினைவுகள் கண் முன் வந்தது எனக்கு. 'எவ்வளவோ சொன்னேன். அப்போது கேட்கவில்லை இவர்' என தோன்றியது. இப்போது கேட்க தயாராய் இருக்கிறார். ஆனால் நான் அதைப்பற்றி பேசவே விரும்பவில்லை. சூழ்நிலைகள் மனிதர்களை 'சரி' 'தவறு' களுக்குள் அடைத்து, மனக் கைதிகளாக்கி விடுகின்றன. எது சரி என்று தெரிந்தவன்

பேசாமல் அமைதியாகும்போது, சரியானவன் கைதியாகிறான். தவறானவன் சரியானவனாய் மாறி, உலகமெங்கும் உலா போகிறான். காலம் எலாவற்றையும் கவனிக்கிறது. இவர்கள் இருவரையும் திரும்ப சந்திக்க வைக்கிறது. வாழ்க்கையின் பல பக்கங்களை காண்பித்த பின் பேச வைக்கிறது. அனுபவமும் முதிர்ச்சியும் அவர்களின் பேச்சையே திருப்பி போடுகின்றன.

செய்த தவறை நினைத்து, வருத்தமாய் அலைபவர்கள் இந்த உலகில் பலர். அதில் சிலருக்கு சம்பந்தப்பட்டவர்களை காணும் பாக்கியத்தை இயற்கை கொடுக்கிறது. பார்த்தவுடன் பழைய சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்டு, மனதை இலேசாக்கி செல்பவன் மனிதம் புரிந்தவன். சந்தித்த பின்னும் விறைப்பாய் திரிபவன் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

வாழ்க்கை மிகவும் இலகுவாக பாடங்களை சொல்கிறது. மனசாட்சியை துணைக்கு அழைத்து வாழ சொல்கிறது. நாம் பாடங்களை இலகுவாக கற்பதை விரும்புவதில்லை. மனசாட்சியையும் துணைக்கு அழைப்பதில்லை. நமக்கென்று ஒரு இராஜ்ஜியம் அமைக்க முயல்கிறோம். அது எவ்வளவு பெரிய இராஜ்ஜியமாக இருந்தாலும் இயற்கையே அதன் வயதை, எல்லையை தீர்மானிக்கிறது என்று உணர்ந்தவுடன் … நாம் உருவாக்கியதை நாமே 'ஒன்றுமில்லை' என்று சொல்லும் பாக்கியம் பெறுகிறோம். காலம் தான் மிகப்பெரிய சக்தி. எப்படிப்பட்ட மனிதர்களையும்

இன்னொரு பக்கம் இழுத்து சென்று விடும். காலம் என்னிடம் பேச ஆரம்பிக்கும் என உணர்பவன் மிகப்பெரிய ஞானி. காலத்தை வெல்வேன் என்று சொல்பவன் சிறு குழந்தை.

நான் எனப்படும் நான், இதுவரை உருவாக்கியது ’ஒன்றுமில்லை’ - என் மனசாட்சியுடன் வாழ்ந்ததை தவிர. அந்த நிறைவில் வாழ்க்கை எனக்கு ஆரம்ப புள்ளியாகவும், அஸ்தமன புள்ளியாகவும் ... அமைந்து கொண்டே இருக்கிறது. இருக்கும்.

- பகிர்தல் தொடரும்.



நான் எனப்படும் நான் : 002

நீண்ட நாட்களுக்கு பின் அவளை சந்தித்த போது என்ன பேசுவது என்று தெரியவில்லை. பேசலாமா வேண்டாமா என்கிற சிறு குழப்பமும் நுரையாய் எழுந்தது. அவளும் என்னை கவனித்து விட்டாள். அநேகமாய் அவளுக்குள்ளும் அதே குழப்பங்கள் இருக்க கூடும்.

கல்லூரி நாட்களில் அவள் பலரின் கதாநாயகி. படிப்பு, திறமை, அழகு, அமைதி, கொஞ்சம் நகைச்சுவை என எல்லாம் கலந்த கலவை அவள். அவள் கடக்கும்போது நண்பர்களுக்கு மத்தியில் எழும் ஒரு திடீர் அமைதி – 'நான் வந்திருக்கிறேன்' என்பதற்கான அத்தாட்சி. சில நண்பர்கள் அவளின் புகைப்படத்தினை அவர்களின் புத்தகத்திற்குள் வைத்திருப்பதுண்டு.

அவளின் முதிர்ச்சி தான் நண்பர்களுக்கு பெரிய பிரச்சினை.

’நான் உன்னை காதலிக்கிறேன்’ என்று சொல்லும் பல நண்பர்களிடம், வெறும் சிரிப்பும், சில கேள்விகளுமாய் அவளின் பதில் விழும். பேசிய நண்பர்கள் அனைவரும் திரும்ப வந்து சொல்லும் ஒரே பதில் ... ’ அவளுக்கு விருப்பமில்லை. அப்படி சொல்வதால் அவளின் மேல் கோபம் வரவில்லை. அவளை இன்னும் பிடிக்கிறது. ”.

ஒருமுறை இந்த எண்ணத்துடன் சென்ற ஒருவனிடம் அவள் சொன்ன பதில் ... ” இந்த ஈர்ப்புகள் எல்லாம் சில காலமே. இது அறிவியல். ஈர்ப்புகள் முடிந்த பின், இருக்கும் யதார்த்தமே நாம். அப்போது சந்திப்போம் ”. அவனுக்கு அது புரியவில்லை. ” கொஞ்ச நாள் கழித்து சொல்வாளோ ? ” என்று என்னிடம் கேட்டான். ’எனக்கும் புரியவில்லை’ என்று அவனிடம் சொன்னேன். ஆனால் எனக்கு புரிந்திருந்தது.

ஒரு முறை நூலகத்தில் அவளை பார்க்க நேர்ந்தது. ஜே.கே வை கையில் வைத்திருந்தாள். நானும் ஜே.கே.வை கையில் வைத்திருந்தேன். ஆனால் இரண்டும் வேறு தலைப்புகள் கொண்ட புத்தகங்கள். ’ஜே. கே. பிடிக்குமா ?’. ’மிகவும்’ என்றேன் நான். அப்படி தொடங்கிய பேச்சு கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்தது. நண்பர்கள் மத்தியில் கொஞ்சம் பொறாமை கலந்த பார்வை. ஒரு நண்பன் அவனின் காதல் கடிதத்தை என்னிடம் கொடுத்து கொடுக்க முடியுமா என

கேட்டான். ’முதுகெலும்புடன் இருப்பவர்களை தான் அநேகமாய் அவள் விரும்பக்கூடும். நீயே கொடு ’ என்று நான் சொல்லியது ஞாபகம் இருக்கிறது.

புத்தகங்கள் எங்களின் சந்திப்பினை மீண்டும் மீண்டும் ஏற்படுத்திக்கொண்டே இருந்தன. அவளின் புத்தக ஆழம் எனக்கு பிடித்திருந்தது. பல தலைப்புகளில் விவாதிப்போம். புத்தகம் தவிர்த்து அவள் பேசியதில்லை. நானும் பேச விரும்பியதில்லை. ஈர்ப்பு வேறு அறிவு வேறு என புரிந்த கால கட்டம் அது.

" எப்படி இருக்கிறீர்கள் " அவளின் கேள்வி என்னை நிகழ்காலத்திற்கு கொண்டு வந்தது. புன்னகைத்தேன். இரு பக்க விசாரிப்புகளுக்கு பின் ஒரு தேநீர் நிலையம் நோக்கி நடந்தோம்.

" மனைவி குழந்தைகள் ? " என்று கேட்டாள். சொன்னேன். " கணவர் குழந்தைகள் " என்று நான் கேட்கவில்லை. ஆனால் சொன்னாள். அதிர்ச்சியாக இருந்தது.

அமைதியாய் இருந்தேன். மனது கனமாய் இருந்தது. மென் மௌனங்கள் கொடுமையானவை. அதுவும் நீண்ட நாட்களுக்கு பின் சந்திக்கும் போது வரும் மென் மௌனங்கள் வன் ஊசிகள்.

’ஏன் அமைதியாகி விட்டாய் ’ அவள் கேட்டாள்.

’ ஒன்றுமில்லை. வாழ்க்கை ஒரு புதிரை கொடுத்து விடை கண்டுபிடிக்க சொல்கிறது. கண்டுபிடிப்பதற்குள் அந்த விடைக்கென்று ஒரு புதிரை உருவாக்கிவிடுகிறது. ” காய்ந்துபோன குரலில் தொனியில் சொன்னேன். உதடுகள் பிரியாமல் அவள் சிரித்து சொன்னள் ... ” நன்றி. பொதுவாக கேள்வியால் எல்லோரும் என்னை அங்கம் அங்கமாய் வெட்டுவார்கள். அல்லது அறிவுரையால் கீருவார்கள். உன்னிடம் ஆரம்பத்தில் இருந்தே ஒரு அலைவரிசையை காணமுடிகிறது என்னால். இப்போதும் அதை நீ வைத்திருப்பது ஆச்சர்யம்தான் ” என்றாள். தேநீர் வந்தது. மௌனத்தையும் அது உடன் கொண்டு வந்தது. இரண்டு கோப்பை தேநீரும் ஒரு நீள் மௌனமும் என்று அங்கேயே கவிதை எழுத தோன்றியது.

” புதையல் தேடி புறப்பட்ட பயணிக்கு எதுவும் கிடைப்பதில்லை. பயணம் செய்ய புறப்பட்டவனுக்கு எல்லாம் கிடைக்கிறது என்று வாழ்வதால் என் இயல்பில் இருந்து மாறுவதில்லை.” .. நான் சொல்லியபோது அவளின் பார்வை என் கண்களில் நேருக்கு நேர் விழுந்திருந்தது. முதல் முறையாக அவள் என்னை இப்படி பார்ப்பதை நான் உணர்ந்தேன். அப்படி என்றால் நானும் முதல் முறையாக பார்க்கிறேன் என்றுதானே அர்த்தம் ! மீண்டும் மௌனம் ஆட்கொண்டது. இந்த மௌனம் எங்கிருந்து வருகிறது ? பேசா உலகின் சாபமா வரமா மௌனம் ?

" சரி. நான் கிளம்புகிறேன் " அவள் தயாரானாள். நானும். அப்போதுதான் கவனித்தேன். அவளின் கைப்பைக்குள் ஜே.கே. அமர்ந்து இருந்தார்.

'மீண்டும் சந்திப்போம் " இருவரும்.

நான் நடக்க ஆரம்பித்த பின் எனக்குள் இருந்த கடினம் இன்னும் குறையாததை உணர்ந்தேன். 'ஏன் இப்படி நடந்தது' என்கிற கேள்வி மரம் துளைக்க முயலும் பூச்சியாய் என்னை துளைத்தது. அவளுக்கென்று ஒரு உலகம் இருந்தது அப்போது. அதில் இருந்து அவள் விலகி இருந்தாள். இப்போது அவளுக்கென்று ஒரு உலகம் இல்லை. இப்போதும் விலகி நிறைவாக இருக்கிறாள். அவளின் நிறைவு யாராலும் புரிந்து கொள்ள முடியா ஒன்று. இந்த உலகம் அவளுக்கு கவலை இருக்கும் என யூகித்து கொள்கிறது. அறிவுரை சொல்கிறது. கேள்வி கேட்கிறது. ஆனால் இந்த உலகப் புரிதலில் அவள் இல்லவே இல்லை. அவள் தெளிவாக இருக்கிறாள். ஆரம்ப உடல் கவர்ச்சி என்பதிலும், இறுதி உடல் சாபம் என்பதும் அவளுக்கு தெரிந்திருக்கிறது. அது புரியா உலகம் வேறு எதையோ பேசுகிறது. அவளின் திரைப்படங்கள் ஆரம்பமும் முடிவுமற்று இருக்கிறது. உலகம் ஒரு ஆரம்பத்தையும் முடிவையும் அவளுக்கு கொடுக்க நினைக்கிறது.

எனக்கு திரும்பி பார்க்க தோன்றியது. திரும்பினேன். அவளும் அதே நேரத்தில் திரும்பி பார்த்தாள். ஒரு

புன்னகையில் இருவரும் இருவரையும் பகிர்ந்து கொண்டோம். இந்த உலகப் பார்வைக்கு அந்த புன்னகை வேறு மாதிரியாக தெரியக்கூடும். நாங்கள் உடலால் விலகுவது எனக்கு புரிகிறது.
ஏதோ ஒரு புள்ளியில் நெருங்குவதும் எனக்கு புரிகிறது. அந்த நெருக்கத்திற்கு விளக்கம் எழுத தேவையில்லை என்பதில் மனது உறுதியாய் இருக்கிறது. சில மனிதர்கள் உடல் கடந்து கலந்து ஒரு அலைவரிசையில் பயணிக்கிறார்கள். அவர்களுடனான பயணம், நினைவுகள், உரையாடல்கள், இருப்புகள் நாம் அவர்களுடன் வாழ்ந்ததிற்க்கான சான்றுகள். அந்த சான்றுகள் இறக்கும் வரை நம்முடன் வாழும். அவைகள் சிற்றின்பம் சார்ந்தவை அல்ல. அவை பேரின்ப வகையின.

என் வாகனத்திற்குள் அமர்ந்த பின் கவனித்தேன். ஜே. கே. என் இருக்கையின் பக்கத்தில் கம்பீரமாய் அமர்ந்து இருந்தார். இந்த மனிதரின் எழுத்து முதிர்ச்சி வாழ்க்கையை வேறு நிலைக்கு எடுத்து செல்வது உண்மையே.

ஜே. கே. வை நீங்கள் படித்தது உண்டா ? அவரின் புரிதல் உங்களுக்கு புரிந்தால் இந்த பகிர்தல் ஏன் எதற்கு என்கிற கேள்விகள் அற்று உங்களுக்குள் அமரும். இந்த பகிர்தலின் ஆழம் உங்களின் மூழ்கும் திறனை பொருத்தது.

[ பகிர்தல் தொடரும் ]



நான் எனப்படும் நான் : 003

" இந்த உலகம் ஒரு வேகமான பாதுகாப்பற்ற உணர்விலேயே இயங்குகிறதோ என எனக்கு ஒரு குழப்பம் இருக்கிறது " - என் நண்பரின் குரல்.

" ஏன் அப்படி " நான் மென்சிரிப்புடன் கேட்டேன்.

" பள்ளியில் படிக்கும்போது மருத்துவப் படிப்பு முதன்மையாக காண்பிக்கபடுகிறது. கல்லூரியில் படிக்கும்போது ஐந்து இலக்க ஆரம்ப சம்பளம் சொல்லப்படுகிறது. வேலைக்கு செல்லும்போது, சொல்வதை கேட்கும் மனைவி தேவை என அறிவுறுத்துகிறது. திருமணத்திற்கு பின் குழந்தை உடனே வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வன்முறையாக நுழைக்கப்படுகிறது. குழந்தை வந்தவுடன், வீடு, கார், இடம், வங்கி இருப்பு எல்லாம் திருமண இயல்புகளாக போதிக்கப்படுகிறது. மகன் மகளின் பள்ளி வாழ்க்கை ... மீண்டும் எனக்கு நடந்தவைகளை நான் அவர்களுக்கு செய்ய வேண்டும் என்கிற கட்டாயம்

ஏற்படுத்தப்படுகிறது. எனக்கே விருப்பம் அற்றவைகளை செய்து நான் வாழும் வாழ்க்கையில் என் குழந்தைகளுக்கு இதை ஏன் சொல்ல வேண்டும் என்ற கேள்விக்கு பதில் சொல்ல இங்கு யாருமில்லை. நான், எனது ... என்று நினைப்பதற்குள் நாம் நமது நம் குழந்தைகள் உற்றார் உறவினர் என்று ஆகிவிடுகிறது வாழ்க்கை. என்னை தேடுவதையே ஒரு கட்டத்தில் நிறுத்தி விடுகிறேன்.

எனக்கு விருப்பமில்லா ஒரு வாழ்க்கையில், மற்றவர்களின் விருப்பமாய் வாழ தொடங்கும் எனக்கு, நோய் வருவதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும். சர்க்கரை, இரத்தக்கொதிப்பு எல்லாம் என் உடல் சார் நோய்கள் அல்ல. நான் நானாக வாழ முடியாததால் வரும் நோய்கள். " அவன் பேசிவிட்டு மௌனமாய் நின்றான்.

ஒன்றும் பேசாமல் நானும் அவன் எதிரில் நின்று கொண்டிருந்தேன். உணர்வுகள் வெளிப்படும்போது தேவை நண்பன் என்கிற கண்ணாடியே தவிர அறிவுரை சொல்லும் ஞானி அல்ல... என்று எங்கோ படித்து ஞாபகம் வருகிறது.

" எனக்கு படிப்பு வந்தால் வராவிட்டால் இப்போது என்ன. ஏன் நான் இப்படித் தான் படிக்க வேண்டும் என உலகம் கேட்கிறது?. ஒருவேளை நான் சரியாக படிக்கவில்லை எனில் ... என்ன நடக்கும் ? பொருளாதார வாழ்க்கை கீழ் இறங்குமா ? படித்து முடித்து விட்டு அலுவலக வேலைக்கு

செல்லும்போது நடக்கும் பயிற்சியில் 'நீ விரும்பியதை செய்.. வளர்வாய்' என்று எவனோ சொல்லும்போது எனக்கு கோபம் வருகிறது. நான் விரும்பியது பாடகர் ஆவது. அப்பா அம்மா உட்பட யாரும் கேட்கவில்லை அப்போது. என்னுடைய குரல் வளம் மேல் எனக்கு அசாத்திய நம்பிக்கை. நான் ஏன் கை கட்டிக்கொண்டு யாரோ ஒருவனின் அலுவலகத்தில் வேலை பார்க்க வேண்டும் ? என் மனைவி என்பவள் தானாக என்னை நோக்கி வரவேண்டும் என்ற சிந்தனை எனக்கு உண்டு. ஆனால் திருமணமே தேடி தேடி செய்தனர். குழந்தை என்பது இயற்கையாக அதன் போக்கில் வரட்டும் என்கிற பார்வை எனக்கு. ஆனால் ஒரே வருடத்தில் குழந்தை. வீடு சொந்தமாய் வாங்கும் எண்ணமே இல்லை. ஐந்து வருடத்தில் சொந்த வீடு. கடன். மாத தவணை. இப்போது என் மகன் மகளாவது அவர்கள் விரும்பிய வாழ்க்கையை வாழட்டும் என்றால் ... அங்கும் 'இப்படி இரு அப்படி இரு' என்கிற பார்வைகள். அறிவுரைகள். நான் இந்த வாழ்க்கையில் எங்கு வாழ்கிறேன் ? இதில் ' சிறப்பா இருக்காங்க' என்கிற பட்டம் வேறு - சொந்த பந்தங்களிடம் இருந்து. " சலிப்போடு பேசினான்.

நான் இன்னுமே பேசவில்லை.

" நான் என் வாழ்க்கையை வாழ முடியவில்லை எனில் ஏன் இந்த வாழ்க்கையை நான் வாழ வேண்டும் ? ஏன் உலகம் ஒரு 'அடுத்தது' என்கிற பார்வையிலேயே சுழல்கிறது. திருமணம் ஆகவில்லை எனில் என்ன ? குழந்தைகள் இல்லை எனில் என்ன ? குழந்தைகள் சரியாக படிக்கவில்லை எனில் என்ன ? வீடு கார் சொத்து வங்கி இருப்பு இல்லாவிட்டால் என்ன ? இருக்கும் எதுவுமே வங்கியின் துணை கொண்டு வாங்கியது. முறைப்படி வீடு க்ரஹப்ரவேசம் வங்கியில் கடன் அடைத்து தானே செய்ய வேண்டும் ? ஏன் அப்படி ஒரு அவசரம் ? நான் வீடு வாங்கி விட்டேன் என்று காட்டி கொள்ள ஏன் உலகம் விரும்புகிறது ? ஏன் நான் முப்பது நாளும் வேலை பார்க்க வேண்டும் ? இருபத்து ஆறு நாட்கள் வேலை ஏன் ? ஏன் நான் நினைக்கும்போது ஓய்வெடுக்க கூடாது ? அப்படி என்ன ஒரு தியாக வாழ்க்கை ? மனைவி பிடிக்கவில்லை எனினும் ஏன் வாழ வேண்டும் ? கணவன் சரியில்லை என்று தெரிந்தும் ஏன் அவள் தொடர வேண்டும் ? நினைத்தபடி வாழ முடியா வாழ்க்கையில் எங்கிருந்து திறமை வருகிறது ? நாம் திறமை என்று சொல்வதெல்லாம் செக்கில் மாட்டிகொண்ட தேங்காய் போல் பிழிந்தெடுக்கப்பட்டதால் வருவது. உண்மையான திறமை வெளிவரும்வரை உலகிற்கு பொறுமை இல்லை. என்னமோ ஆகிவிடும் என்ற ஒரு கவலையை இந்த உலகம் என் தலைமேல் நெருப்பாய் எரித்துக்கொண்டே ஏன் இருக்க வேண்டும் ? " கொஞ்சம் மூச்சு வாங்கினான் அவன்.

நான் மௌன நிலையை தொடர்ந்தேன்.

" நிறைய நாட்கள் நினைத்தது உண்டு எங்காவது சென்று விடுவோம் என்று. குழந்தைகளை பார்க்கும்போது மனம் அமைதியாவதால் இந்த வாழ்க்கையை வாழ்கிறேன். அவளும் பாவம். என்னை நம்பி வந்தவள். அவள் மனதிலும் இதுபோன்று எவ்வளவோ இருக்கலாம். அவள் ஒருமுறை சொன்னாள்.. " நான் ஓவியம் நன்கு வரைவேன் ". இந்த உலகம் ஒரு பாடகனையும் , ஓவியம் வரையும் பெண்ணையும் கணவன் மனைவியாக்கி இதுவே வாழ்க்கை என்கிறது. என் மகள் பாடும்போது நான் என்னை உணர்கிறேன். ஆனால் அவளை பாடச் சொல்லி இதுவரை கேட்கவில்லை. அவள் விரும்பினால் பாடட்டும். மகன் வரைவதை என் மனைவி ஆர்வமுடன் பார்ப்பதை நான் கவனிக்கிறேன். ச்ச்சே .. என்ன வாழ்க்கை இது ? " சலிப்புடன் பேச்சை நிறுத்தினான். காற்று கொஞ்சம் வேகமாய் இருவர் முகத்தையும் அப்பியது.

நான் மௌனமாய் கவனித்தேன்.

அவனின் தொலைபேசி அழைத்தது. காதில் வைத்தவன் 'வர்றேன் " என்று சொல்லிவிட்டு என்னிடம் விடைபெற்று கிளம்பினான். இப்போது வீடு சென்றவுடன் இவன் வாழும் ஒரு வாழ்க்கைக்கு பெயர் என்ன ? தியாகமா ? கடமையா ? வேறு வழியில்லை என்பதா ? அவன் விருப்பமா ? அவனின் தவறா ? அவனின் யதார்த்தம் புரியா

மனநிலையா ? அல்லது புரிந்த மனநிலையா ? ...
கேள்விகள் குடுவைக்குள் விழும் பனிக்கட்டிகளாய் என்னுள் விழுந்தன. பதில்களை காணோம்.

பதில்கள் உங்களிடம் இருக்கிறதா ?




நான் எனப்படும் நான் : 004

எனக்கு என்னை மிகவும் பிடித்த தருணமாக இருக்கும் தருணங்களில் ஒன்று நான் எவ்வித ஒப்பனையும் இன்றி நானாக இருப்பது. கன்னங்களில் வளர்ந்த தாடி எனப்படும் கேசம், வண்ணம் தீட்டப்படாமல் இருப்பதில் என் இயல்புத் தன்மை தொடங்குவதை நான் உணர்கிறேன். வண்ணம் தீட்டிய காலகட்டங்களில் கிடைக்கும் ஒரு செயற்கை 'அட' அழகை இந்த உலகம் விரும்புவதை கண்டு ஆச்சர்யம் அடைந்திருக்கிறேன். 'இளமையா எப்படி இருக்கீங்க ? " என்ற கேள்வியின் மனவியல் பிரச்சினை நிறைய மனிதர்களுக்கு புரிவதில்லை. இருப்பதை தவிர்க்கும் மனநிலை அது. இருப்பதை சிறப்பாக காட்டுவது என்று சொன்னாலும், இருப்பது என்னவோ அதுவே நிஜம். அந்த நிஜ உலகத்தில் பயணப்படவே எனக்குள் விரும்புகிறேன்.

நான் நானாக இருக்கும்போது தெளிக்கப்படும் கேள்விகளில் ஒன்று ... " வயதாகி விட்டதோ ? " ... இந்த கேள்விக்கு நான் அளிக்கும் பதில் கொஞ்சம் யோசித்து பார்த்தால் புரியும். 'ஆம். வயதாவது உண்மை. அதில் மறைத்தல் பொருள் வெட்கம் என்ன நமக்கு ? ". நான் இளமையாயிருக்கிறேன் என்று தெரிவிக்க விரும்புவதும் ஒரு வித உயர் மனநிலை பிரச்சினையோ என தோன்றுகிறது. இதுதான் நான் என ஏன் நம்மை காட்ட நாம் முயல்வதில்லை ? முயலாததை நானும் செய்திருப்பதால் என் பார்வையை இங்கு பகிர்கிறேன். பொதுவாகவே நாம் இக்கரைக்கு அக்கரை பச்சை மனிதர்கள். நம்மை விட 'யாரோ' நன்றாக தெரிவதுதான் நம் பிரச்சினை. அங்குதான் 'அவரை விட, அவளை விட' போன்றவை நம் எண்ணங்களில் கலக்கின்றன. ஒத்துப் பார்த்தல் மனநிலை அது. இதற்க்கு எல்லையே இல்லை. இதையே அழகு சாதனப் பொருட்கள் விற்கும் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. கொல்கின்றன.

எழுபது வயதில் சுறுசுறுப்பாய் இருக்கும் யாரோ ஒருவர் நம்மை ஈர்க்கிறார். ஏன் ? நாம் சுறுசுறுப்பாக இல்லாததால். எது என்னிடம் இல்லையோ அதுவே ஈர்ப்பாகிறது. என்னிடம் இளமையான தோற்றம் இல்லை எனில் அது வைத்திருக்கும் மனிதர்கள் என்னை ஈர்க்கிறார்கள். முதலில் அழகு என்பது 'இப்படித்தான்' என்று யார் வரையறை செய்தது?. இயற்க்கை ஒவ்வொன்றிலும் 'அழகை' படைத்து அனுப்புகிறது. நாம் அழகு என்று ஒரு உயரத்தை

வைத்துகொண்டு ஒத்துப் பார்க்கிறோம். அங்குதான் மனிதம் தொலைகிறது.

ஒரு ஆரம்ப பள்ளிக்குள் சென்றால் அனைத்து குழந்தைகளும் அழகாக தெரியும் நமக்கு, ஒரு உயர்நிலை பள்ளிக்கு செல்லும்போது ... இவன் இவள் அழகு என தேர்ந்து எடுக்கிறோம். என்ன ஒரு மனநிலை வளர்ச்சி ! இளமை ஒரு உயரமாய் வைக்கப்படும்போது முதுமை ஒரு துயரமாய் பார்க்கப்படுவது எதார்த்தம் தான். ஏன் முதியவர்கள் கைவிடப்படுகிறார்கள் என்பதும் இங்கு புரியும். ஒரு இளம்பெண் தனியாக இருக்கிறாள். உதவிக்கு ஆள் தேவைப்படுகிறது. வேகமாக செயல்படும் நாம் ... அதே தெருவில் இருக்கும் ஒரு வயதான பாட்டிக்கு உதவி தேவைப்படும்போது இந்த வேகத்தில் செயல்படுகிறோமா ? ஏதோ ஒன்று ஈர்க்கும்போது, ஏதோ ஒன்று வெறுக்கப்படுவது இயல்புதானே. ஆரோக்கியம் வேறு. அதில் நான் தெளிவாக இருக்கிறேன். தோற்றம் வேறு. அதிலும் நான் தெளிவாக இருக்கிறேன்.

நம்மில் புதைந்து மூச்சுடன் வாழும் மனிதமே அழகு. அதுவே நிரந்தரம். வயதான நண்பர்கள் பலரின் நட்பினை பெற்ற புண்ணியம் எனக்கு உண்டு. அப்படி ஒருவர் ... " இதை உங்கள் நண்பரிடம் கொடுங்கள். அவரின் மூச்சு பிரச்சினைக்கு இது உதவும் " என்று சொன்னபோது ... அவர் எனக்கு அழகாக தெரிந்தார். இதையே ஒரு இளம்பெண் சொன்னாலும் அழகாகவே தெரிவார். ஏன்

எனில் நான் கவனிப்பது மனிதம் எனும் யதார்த்த அழகை. தோற்றங்கள் தாண்டிய அழகு வர்ணிக்க முடியா ஒன்று.

நான் அழகாக இருக்கிறேன் என்ற முக பாவத்தைவிட .. வரவேற்கும் சிரித்த மூதாட்டி, கண்டவுடன் சிரித்து ஓளியும் சிறு குழந்தை, யதார்த்தமாய் பேசும் என் நண்பன், இதுதான் நான் என்று உரையாடும் நண்பி ... மனதிற்கு பிடிக்கிறது. தோற்றம் தாண்டி ஒரு உலகம் நமக்குள் இருக்கிறது. அங்கு என் கை பிடித்தவர்கள், என்னை விட்டு அகல்வதில்லை.

தோற்ற பிரமையில் இருந்து மீள்வதும் முதிர்ச்சியே. மீள தயாரா ?. அல்லது இல்லாத ஒன்றை பெறும் போராட்டத்தில் வாழ்க்கையை பணயம் வைப்பதில் கவனமா ? முடிவு செய்வோம்.



*நான் எனப்படும் நான் : 005*

*நீண்ட நாளைக்கு பின் திடீரென்று தோன்றிய ஒரு வினாடி சிந்தனை என்னை மிகவும் ஆச்சர்யப்படுத்தியது. " சர்ச்சுக்கு செல்ல வேண்டும் ".*

*ஐந்தாம் வகுப்பு வரை Danish Mission பள்ளியில் படித்தபோது தான் சர்ச் எனக்கு முதலில் அறிமுகமானது. சர்ச்சின் உயரம் தான் என்னை மிகவும் ஆச்சர்யப்படுத்தி இருக்கிறது. அந்த உயரத்தின் மேல்புறம் தெரியும் சிலுவை என்னை இன்னும் பிரமிக்க வைக்கிறது. மழை காலங்களில் சர்ச்சிற்கு கீழ் நிற்கும்போது, அதன் வெளிப்பக்க உயர சுவற்றில் இருந்து கீழே விழும் நீரே, தனியாக மழை பொழிவதுபோல் தோன்றும். சர்ச்சிற்கு உள்புறம் இருக்கும் உயரம் எனக்கு புதிது.*
*அப்போது எங்களின் வீடு கூரை வீடு. அதன் உயரம்*

தலைக்கு அருகில் இருக்கும். தொட்டுவிடும் தூரத்தில் என் வீடு பார்த்துவிட்டு, திடீரென்று
பார்த்த உயரமான சர்ச் என்னை வியப்பிற்குள் ஆழ்த்தியது ஒன்றும் ஆச்சர்யமில்லை. நிறைய நேரங்களில் சர்ச்சின் உயரத்தை நான் பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறேன். நம்மிடம் இல்லாதவை நம்மை ஈர்ப்பது இயற்க்கை தானே !

முள் கிரீடம் சுமத்தப்பட்ட, இரத்தம் வழியும், உடல் முழுக்க சங்கிலியால் அடிக்கப்பட்ட ... கீறப்பட்ட இயேசு எனக்கு ஏனோ பிடிப்பதில்லை. ஒருவரை வலியோடு பார்த்துக்கொண்டே அவரை தெய்வமாக கும்பிடுவது எனக்குள் நிறைய வலியை ஏற்படுத்தி இருக்கிறது. திடீரென்று ஒரு நாள், இரு கைகளையும், விரித்து எதிரில் இருப்பவரை அழைப்பதுபோல் நிற்கும் இயேசு எனக்கு மிகவும் பிடித்தது. நான் கும்பிடும் தெய்வம் மகிழ்வாக இருக்க வேண்டும் என்ற நினைவு எனக்கு அப்போதைய பள்ளி நாட்களில். இப்போதும்கூட இரத்தம் வழியும் இயேசுவை காணும்போது ஏனோ எனக்குள் ஒரு வலி இருக்கிறது. *Rio de Genero* வின் இரு கை விரித்த இயேசுவை ஒருமுறை பார்க்க எனக்குள் ஒரு சின்ன ஆசை உண்டு.

சர்ச்சின் அமைதியான சூழ்நிலை எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. அமர்ந்த நிலையில், கண்கள் மூடியவுடன் எனக்குள் ஓடும் ஒரு மௌன ஆறு என்னை முழுவதுமாய் நனைப்பதை நான் உணர்ந்து இருக்கிறேன். என் மூச்சுக்காற்று எனக்குள்

மேலும் கீழும் மிதந்து நகர்வதை நான் கவனித்து இருக்கிறேன். சில நிமிட அந்த மௌனம் எனக்குள் ஒரு புது அலையாய் மலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

முட்டிக்கால் போட்டு, 'பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பேராலே ... ஆமென் ' .. என்று சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறது. தலை, மார்பு, இடது தோள், வலது தோள்... என்ற ஒரு வரைமுறை என்னுள்ளே இன்றும் இருப்பது தொட்டில் பழக்கம் வகை. ஒரு முறை காய்ச்சல் வந்த என் நண்பனுக்காக இருபது நிமிடம் முட்டிக்கால் போட்டு நான் வேண்டியது இப்போது சிரிப்பாகவும், இனிமையாகவும் இருக்கிறது.

ஆக ... மீண்டும் சர்ச்சிற்கு சென்றேன். உயரம் மீண்டும் என்னை ஈர்த்தது. சிறுவயது நினைவுகள் உடன் தொடர, உள்ளே நுழைந்தேன். சர்ச்சின் அமைதி, ஆட்கள் அற்ற உட்காருமிடம், இரு கை விரித்த இயேசு, ஏற்றப்பட்ட மெழுகுவர்த்திகள் ... சர்ச் என்னைப்பொருத்தவரை பிரமிப்பு தான். இருந்த பைபிள் ஒன்றின் பக்கங்கள் காற்றில் பறந்து ஒரு பக்கத்தில் நின்றது. அங்கே இருந்ததை படிக்க ஆரம்பித்தேன்.

" ஆண்டவரே ... நான் குற்றமற்றவன் என்பதை அறிவியும். ஏனெனில், என் நடத்தை நேர்மையானது ... " என்று அந்த பக்கம் பேசியது. மனது அந்த வரிகளில் ஒன்றியதை கவனித்தேன்.

" என்னை சோதித்து ஆராய்ந்து பாரும் "

வரிகள் எனக்காக எழுதப்பட்டதாய் உள்மனம் பேசியது.

" பொய்யரின் நடுவில் நான் அமர்வதில்லை "

" வஞ்சகரோடு நான் சேர்வதில்லை " ...

என் மனசாட்சி பேசியது போல் உணர ஆரம்பித்தேன். அந்த பக்கம் படித்து முடித்து, கண் மூடி அமர்ந்து இருந்தேன். என்னமோ தெரியவில்லை ... மகிழ்வாய், நிம்மதியாய், உணர்ந்தேன். எழுந்து நடக்க ஆரம்பித்தேன்.

வெளியே வந்து என் வாகனத்தில் அமர்ந்தவுடன் ... மனது நிறைவாக இருந்தது. சில நேரங்களில் திடீரென்று தோன்றுவதை நிறைவேற்றி முடிக்கும்போது ... மனதிற்குள் எதையோ சாதித்த, ஆரம்பித்த, முடித்த ... அல்லது அணைத்துக்கொண்ட ஒரு உணர்வு. நகர ஆரம்பித்த வாகனம் சர்ச்சை விட்டு விலகியது. நான் அந்த சர்ச் அனுபவத்தில் இருந்து இன்னும் விலகவில்லை.




*நான் எனப்படும் நான் : 006*

*உடலை ஆரோக்கியமாக வைத்துகொள்ள வேண்டும் என்கிற என் எண்ணத்திற்கு மாற்று இல்லை. ஆனால் ...*

*பயணங்களின் போது உணவும் உடற்பயிற்சியும் கடைபிடிக்க முடியாமல் போவது எனக்கு மிகவும் வருத்தமான விஷயம். கடைசி ஏழு நாட்களில் ஆறு விருந்து அழைப்புகள். தவிர்க்க முடியவில்லை. உடலா, அன்பா, மறுப்பா, ஆரோக்கியமா, நழுவலா . என்ற கேள்களுக்கு இடையில் வாழ்க்கை பயணிக்கிறது.*

*சில வருடங்களுக்கு முன் ஒரு நாள் அதிகாலையில் எடுத்த திடீர் முடிவில், அறுபது நாட்கள் எல்லாவற்றில் இருந்தும் ஒதுங்கி இருந்தேன். உடற்பயிற்சி, சீரான உணவு முறை என்று பயணப்பட்ட போது ஆரோக்கியமான உடல் கிடைத்தது. எடை கரைந்து, தோற்றப் பொலிவுடன்*

எங்கும் நகர முடிந்தது. கிட்டத்தட்ட நாற்பது சதவிகத தேவையற்ற எடை காணாமல் போனது. என் தோற்றத்தில் வயது அறியமுடியாமல் மனிதர்கள் தடுமாறுவதை நான் ரசித்து இருக்கிறேன். அப்போதைய புகைப்படங்கள் எனக்கு மிகவும் அருகில் பயணிப்பவை. என் ஆரோக்கிய தரத்தின் தர அளவீடு அது. அணியும் ஆடை வயிற்று பகுதியில் காற்றில் அசைவதை நான் உணர்ந்து இருக்கிறேன். என்னை நான் மிகவும் ரசித்த காலம் அது. ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமெனில் *slim fit and simple*.

மீண்டும் பயணங்கள் ஆரம்பிக்க, உடற்பயிற்சி இல்லா நாட்களும் உணவு கட்டுப்பாடு இல்லாமலும் நேரம் கடந்து உண்பதும் தொடர்ந்தது. சரியாக ஐந்து வருடங்களில் என்னை எனக்கு அடையாளம் தெரியாத அளவிற்கு எடை சேர்த்திருக்கிறேன். படிக்கட்டு ஏறும்போது மூச்சு வாங்க ஆரம்பிக்கிறது. ஆடை காற்றில் பறப்பதில்லை. மாறாக காற்று ஆடையை அறையும்போது என் எடையை இன்னும் துல்லியமாக அறிவிக்கிறது.

சிலர் என்னிடம் உரிமையாக 'எடையை குறையுங்கள் ' என்று சொல்வதும், பலர் என்னிடம் சொல்ல முடியாமல் செல்வதும் நடக்கிறது. கண்முன்னே. எவ்வளவு சமாதானங்கள் நான் சொன்னாலும், கண்டுபிடித்தாலும் ... ஆரோக்கியம் மற்றும் தோற்றப் பொலிவு அவசியம் என உணர்கிறேன். [ பொய் தோற்றப் பொலிவில் எனக்கு உடன்பாடில்லை ]. மீண்டும் உள்ளுணர்வு என்னை

கடுமையாக கேள்வி கேட்க ஆரம்பித்து இருக்கிறது. ’ எல்லாம் சரி ... எப்போது மீண்டும்? என்பதே அதன் இப்போதைய கேள்வி ”.

காக்கி சட்டை கமல் பார்த்து, உடற்பயிற்சி கூடம் சென்று, அப்போதே உணவு, உடல் மற்றும் எண்ணங்களின் சீரமைப்பில் கவனம் செலுத்திய நான், பின் *Arnold*ன் பாதிப்பில் அடுத்த கட்ட உடற் பயிற்சிகளுக்கு தயாரானேன். பள்ளி கல்லூரி காலங்களில் *slim fit* தொடர்ந்தது. கல்லூரி முடித்து, வீட்டில் வந்து தங்கிய சில காலங்களில் தான் முதன் முதலாக எடை அதிகமானது. அங்கிருந்து எடை குறைப்பு சேர்ப்பு என ஏற்றமும் மாற்றமுமாய் நிகழ்வுகளை கவனிக்கிறேன். இதில் நான் என்னை முழுவதுமாக ரசித்த தருணங்கள் நான் ஆரோக்கியமாக, தோற்றப் பொலிவுடன் இருந்த தருணங்கள். ஆக ... தர அளவீடு என்பது சிறப்பாகவும், சிறப்பற்றும் இருக்க நானே காரணம்.

*September* மாதம் என் வாழ்வில் எப்போதுமே மாற்றங்களை ஏற்படுத்திய மாதம். *September* மற்றும் *October* மாதங்களை கையில் எடுக்க முடிவு செய்திருக்கிறேன். இந்த இரு மாதங்களுக்கு பின், ஒரு விதமான தர அளவீட்டை உணவு மற்றும் ஆரோக்கியத்தில் பின்பற்ற முடிவு செய்திருக்கிறேன். இங்கே நான் குறிப்பிடுவதில் இதை படிப்பவர்களுக்கு ’தெளிவு’ வேண்டும் என நினைக்கிறேன். *Impress* எனப்படும் மற்றவர்களை கவர அல்ல இது. *Impressing others* ஒரு வித

நோய். நான் நானாக இருப்பதையே கையில் எடுக்கிறேன். நான் நானாக இருப்பதில் கிடைக்கும் மகிழ்வு அளவறிய முடியாதது. பயணங்கள் இருந்த போதிலும், இதுதான் நான் என்கிற என் அடையாளத்திற்க்குள் தன்னை உணர்வதே இந்த உடலுக்கு நான் செய்யும் நன்றிக்கடன் ஆகக்கடவது என எனக்குள் கட்டளை இடுகிறேன். *Time to chisel out the actual me from the available me !*

என்னுடன் சேர்ந்து கொள்பவர்கள் இந்த அறுபது நாள் பயணத்தில் பயணிக்கலாம். தினசரி உணவு முறையில் இருந்து, உடற்பயிற்சியில் இருந்து, கால அளவுகளை துல்லியமாக பதிவிடுவது நடக்கப்போவதால் ... என்னுடன் பயணிப்பவர்களுக்கும் இது மிக உதவியாக இருக்கலாம். விருப்ப மனிதர்கள் தயாராகலாம். கட்டாயமில்லை.

*Chubby, Bubbly, Over Weight, Bloating* ... அத்துணை வார்த்தைகளில் இருந்தும் என்னை நான் விலக்கி கொள்ள முடிவெடுத்து இருக்கிறேன். மீண்டும் எடை ஏற்றி கொள்ளாமல், ஒரே சம நிலையில் உடலை வைத்திருப்பது எனவும் முடிவு செய்திருக்கிறேன். அந்த வியர்வை ததும்பும் *workout* கண் முன்னே காட்சியாய் நகர்கிறது. நனைந்து போகும் உடல், ஆடை மற்றும் நினைத்த இலக்கினை அடைந்த பின் கிடைக்கும் பெருமூச்சு .. எல்லாவற்றையும் மீண்டும் காண இருப்பதில் மிக்க மகிழ்வாய் உணருகிறேன். வெறும் அறுபது நாட்கள். தற்போதைய எனக்கும், உண்மையான எனக்கும் இடையில் இருக்கும் நாட்கள்

அறுபது மட்டுமே. அறுபது நாள் கழித்து என் உண்மையான என்னை இங்கே பகிர்வதில் இருக்கிறது என் செயல் சாமர்த்தியம்.

எனக்கான தர அளவீடை நிர்ணயிக்கும் இன்னொரு புகைப்படம் இதில் இணைகிறது. அருகில் என்னுடன் இருக்கும் Skywalk Fitnes பிரகாஷ் என்னை மீண்டும் உருவாக்கியதில் மிகவும் முக்கிய பங்கு வகித்தவர். அவரின் ஆலோசனைகளும் உடற்பயிற்சி முறைகளும் எனக்கு மிகவும் நம்பகமாக இருந்த இருக்கின்ற ஒன்று. அவருக்கு என் நன்றியை மீண்டும் தெரிவிக்கிறேன். அதேபோல் ப்ரியா என்கிற *nutritionist* கொடுத்த உணவு முறைகள் என்னை சிறப்பாக பன்படுத்தின. அவருக்கும் என் நன்றிகள். இப்போதைய என் உடலை மீட்கும் பயணத்தில் புதியவர்கள் சிலர் பங்கு பெறுவதும், அவர்களின் வழிமுறைகளும் என்னுள் பயணிக்க போவது உறுதி. அவர்களுக்கும் என் முன் நன்றிகள்.

இந்த பதிவினை மீண்டும் நவம்பர் ஒன்று அன்று மீள் பதிவில் இடும் அந்த நேரத்தை நோக்கி நான் பயணிக்க தொடங்குகிறேன். இந்த பயணம் என் மனதிற்குள் நெருக்கமாய் நிற்கும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

நான் எனப்படும் நான் ...




நான் எனப்படும் நான் : 007

வாழ்க்கையின் விதிகள் நிறைய பேருக்கு புரிவதில்லை. வெற்றி பெற்றதாகவும், தோல்வி பெற்றதாகவும் நினைத்துக்கொண்டு, சூழ்நிலைகளுக்கு தகுந்தவாறு வாழும் பலரை நான் கவனித்துக்கொண்டு இருக்கிறேன்.

அந்த மனிதரின் பேச்சு அப்படி இனிப்பாக இருந்தது. எங்கோ நடிக்கிறார் என தெரிந்தாலும், நோக்கத்தின் நன்மை கருதி அவருடன் பயணிக்க தயாரானேன். சில மாதங்களில் அவர் தன் முகத்திற்கு பூசிக்கொண்ட சாயம் உண்மை மழையில் கரைய ஆரம்பிக்க, முகமூடியை தொலைத்த கள்வனாய் பேச ஆரம்பித்தபோது நான் சொன்னேன் .... " உங்களின் பலம் உங்களுக்கு தெரியவில்லை. இவ்வளவு சிரமப்பட்டு நடித்து சில விஷயங்களை நீங்கள் பெறுவதை விட, இயல்பாய் இருந்து நிறைய விஷயங்களை நீங்கள் பெற்று விட முடியும். ஏன் நடித்து வெற்றி பெறுவதை விரும்புகிறீர்கள் என எனக்கு தெரியவில்லை. ஒரு நல்ல நண்பரை இழந்து

விட்டீர்கள் " என்று சிரித்த முகத்துடன் சொல்லிவிட்டு அந்த மனித பிம்பத்தை கடந்தேன். அப்போது எனக்கு மனதிற்குள் தோன்றிய வரியினை இங்கு பகிர்கிறேன். " ஒரு வெற்றிக்காக, ஒரு சுயநலத்திற்காக, கொஞ்சம் பணத்திற்காக, சில சொத்திற்காக, தன்முனைப்பு வீம்பிற்காக, வாழ்க்கையை நாம் பணயம் வைத்துவிட்டு, மனிதர்களை இழக்கிறோம். நல்ல மனிதர்களை நம்மை சுற்றி இழந்த பின், நம்மை சூழ்ந்து வாழ்பவர்கள் சுயநலவாதிகள் என்பது நமக்கு ஏன் புரிவதில்லை ?

நாம் நல்ல மனிதர்களை இழக்கும்போது, ஒருமுறைக்கு இரு முறை நம்மை நாம் உள்பரிசோதனை செய்து கொள்வது நல்லது. உண்மையில் நம்மிடம் தவறு இருந்தால், மன்னிப்பு கேட்டு நம்மை நல்ல மனிதர்களுடன் இணைத்து கொள்வது மிக நல்லது. இதில் எந்த கௌரவ குறைச்சலும் இல்லை. எப்படிப்பட்ட மனிதர் என்றே தெரியாதவரிடம் சிரித்துகொண்டு இருப்பதை விட, நல்ல மனிதர் என்று நாம் நினைப்பவரிடம் தவறை ஒத்துக்கொண்டு நம் இயல்புடன் வாழ்ந்த விடுவது நல்லது.

நல்ல மனிதர் என்று யாராவது இருக்கிறார்களா ? இந்த கேள்வி இந்நேரம் உங்களின் உள்ளே படர ஆரம்பித்து இருக்கும். எல்லோரும் சூழ்நிலைகளின் கைதியே. வாய்ப்பு இருந்தால் ஒரு தவறு செய்யலாமே என நினைக்க வைக்கும் உலகம்தான் இது. தனக்கென்று கொஞ்சம் சொத்து, பணம், புகழ் .. என்று சேர்க்க விரும்பும் கூட்டமே இங்கிருக்கிறது. அந்த 'கொஞ்சம் சொத்து' என்பது அவரவரின் ஆசைக்கேற்ப்ப விரிந்து கொண்டே செல்கிறது. இந்த கூட்டத்தில் 'நல்ல மனிதர்' என்று யாராவது இருக்க

முடியுமா ?

இருக்க முடியும். இருக்கிறார்கள். சிறு உதவிகளில் ஆரம்பிக்கும் அவர்களின் நட்பு, நிலத்தில் விழுந்த விதை மண்ணை இறுகப்பற்றி வளர்வதுபோல் நல்ல சிந்தனைகளுடன் நம்மை தொடர்கிறது. நமக்கு ஒரு கடினமான சூழ்நிலை என்னும்போது மட்டுமே இவர்களை நாம் நினைப்போம். அதற்காகவெல்லாம் அவர்கள் வருத்தமே படமாட்டார்கள். ஏதோ நமக்காகவே காத்திருந்தது போல் உதவுவார்கள். எப்படி இவர்களை நாம் இவ்வளவு நாள் மறந்தோம் என்று நாம் நினைக்கும் படி இருக்கும் அவர்களின் உதவிகள். வழக்கம்போல உதவிகள் பெற்றவுடன் அவர்களை மறந்துவிடுவோம். மீண்டும் ஒரு கடின சூழ்நிலையில் மட்டுமே அவர்களை நாம் நினைப்போம். அப்போதும் அவர்களிடம் இருந்து எந்த வருத்தமும் இருக்காது. 'முதலிலேயே ஏன் சொல்லவில்லை' என்று செல்லமாக கோபிப்பார்கள். மீண்டும் அவர்களின் உதவுதல் தொடரும். இப்படி ஒரு மனிதர் அல்லது மனிதர்கள் இல்லா வாழ்க்கை வாய்ப்பேயில்லை. இவர்களே நான் சொல்லும் நல்ல மனிதர்கள். அவர்களின் வாழ்விலும் நிறைய பிரச்சினைகள் இருக்கும். ஒரு சிலவற்றில் அவர்களின் நிலைப்பாடு சரியென்று நமக்கு தோன்றும். ஒருசிலவற்றில் 'சரியில்லையே' என தோன்றும். ஆனால் இது எதுவும் அவர்கள் நமக்கு செய்யும் உதவியை நிறுத்தவே நிறுத்தாது. இந்த மனிதர்களை நாம் இழக்கும்போது வாழ்க்கையின் ஏதோ ஒன்றை நாம் இழக்கிறோம் என்பதே உண்மை. யோசிப்போம்.

துரோகங்கள் பலவகை. இதில் சில துரோகங்கள் வெளியே சொல்ல முடியாதவை. நம்ப வைத்து பின் கழுத்தை அறுப்பது போன்ற துரோகங்கள் நடக்கும்போது மனிதன் விலங்காக மாறும் வாய்ப்புகள் அதிகம். ஒருவனிடம் நம்பிக்கையை கொண்டு வந்து அவனை கொள்வது மனசாட்சியை அழிக்கும் நிகழ்வின் உச்சக்கட்டம். எனக்கு இப்படி ஒன்று நிகழ்ந்த போது, சம்பந்தப்பட்ட மனிதரிடம் பேசினேன். ஆம். நேரிடையாக. 'நீங்கள் இப்படி செய்தது சரியல்ல. இது என்னை இப்போது பாதித்தாலும் என் மனநிலையின் முதிர்ச்சியால் நான் இதில் இருந்து வெளிவந்து விடுவேன். சில காலங்களுக்கு பின் நீங்கள் இதை நினைத்து வருந்துவீர்கள் " என்று சொல்லிவிட்டு சிரித்த முகத்துடன் விடை பெற்றேன். " அப்படி எல்லாம் நான் வருத்தப்பட வாய்ப்பில்லை " என்று சொல்லிவிட்டு கதவை எனக்கு பின்னே வேகமாய் அறைந்தார் அவர். மனது வலித்தாலும் என் இயல்புடன் பயணிக்க ஆரம்பித்தேன். பல வருடங்களுக்கு பின், என்னை அவர் மீண்டும் சந்தித்தார். நடந்த விஷயங்களுக்கு மன்னிப்பு கேட்டார். மகளின் திருமணத்திற்கு அழைத்தார். வருகிறேன் என்று சொல்லிவிட்டு கேட்டேன் .. " எது உங்களை மன்னிப்பு கேட்கவைத்தது ? ". அவர் சொன்னார்.. " தோல்விகள் வந்தன. நானும் நம்பவைத்து ஏமாற்றப்பட்டேன். அப்போது நீங்கள் சொன்னவை ஞாபகத்திற்கு வந்தது. நீங்கள் என்னிடம் கம்பீரமாக வீட்டிற்கு வந்து சொல்லிவிட்டு சென்ற அளவிற்கு என்னால் சொல்ல இயலவில்லை. ஏன் எனில் நான் மனசாட்சிப்படி நடக்கவில்லை. நீங்கள் என் வீட்டில் பேசியபோது ஒருவித அமைதியுடன் பேசினீர்கள். அது

நீங்கள் மனசாட்சிப்படி நடந்ததன் அடையாளம் என்று நினைக்கிறேன். அப்படி என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. ஏன் எனில் என்னை ஏமாற்றிய அவனை ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்தேன். இருந்தாலும் இது இப்படியே தொடரக்கூடும் என்ற பயம் வந்தது. என்னை மாற்றிக்கொள்ள முடிவு செய்தேன். என்னை விட சிறிய வயது நீங்கள். இருந்தாலும் மன்னிப்பு கேட்டு விடுவது என்று வந்தேன். இப்போது மனநிலை இயல்பாக இருக்கிறது. மிகவும் நன்றி " என்றார். பல வருடங்களுக்கு முன் அவர் வீட்டில் இருந்து வெளியே வந்தபோது எப்படி சிரித்த முகத்துடன் இருந்தேனோ அதேபோல் ... அப்படியே நான் இருந்தேன். அவர் உணர்தலில் எனக்கு மகிழ்ச்சி.

இப்படியான தருணங்கள் வாழ்வில் நடந்துகொண்டே இருக்கின்றன. இவை நமக்கு மட்டுமே தெரிந்த ரகசியங்கள். நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இது நடந்திருக்கும். ஒன்று மன்னிப்பு கேட்டிருப்போம். அல்லது வழங்கி இருப்போம். மனித உறவின் மகத்தான தருணம் அது.

மன்னிப்பு கேட்க வெட்கப்பட்டு இன்னும் நீங்கள் வீம்பாக திரிகிறீர்கள் என்றால், மனிதத்தை உணரவில்லை என்று அர்த்தம். உங்கள் மேல் தவறு இருந்தால் மன்னிப்பு கேட்டுவிடுங்கள். உங்கள் மேல் தவறு இல்லை எனில், தவறு இல்லை என சொல்லிவிட்டு உங்களின் இயல்பில் வாழ்க்கையை தொடருங்கள்.

யோசிப்போம். யோசிப்போமா ?




நான் எனப்படும் நான் : 008

என்னிடம் பொதுவாக கேட்கப்படும் கேள்வி ... " எப்படி இந்த பயிற்சியாளர் துறையை தேர்ந்து எடுத்தீர்கள் ? "

அப்பாவிற்கு முதல் கைதட்டல். கல்கண்டு, அம்புலிமாமா... வாங்கி கொடுத்து படிக்க சொல்லியபின், மெதுவாக என்னை நூலகத்திற்கு இழுத்து சென்ற மனிதர். அங்கிருந்து நான் புத்தக வில்லைகளால் உலகம் படிக்க ஆரம்பித்தேன். கள்ளக்குறிச்சியின் நூலகத்திற்கு, அத்துணை நன்றிகளும். மீண்டும் ஒரு முறை அந்த நூலகத்திற்கு சமீபத்தில் சென்று வந்தேன். அரசாங்கம் இன்னும்
நூலகங்களுக்கு நிறைய செய்ய வேண்டும். என் உயிர் பிரிவதற்குள், ஒரு நூலகத்தை இந்த உலகத்திற்கு கொடுத்து விட்டு செல்ல நான் விரும்புகிறேன். அதற்க்கான பணி கூடிய விரைவில் ஆரம்பிக்கிறேன்.

பள்ளி காலகட்டம் முடிந்து, கல்லூரியில் இந்த நூலக வாசிப்பு தொடர்ந்து கொண்டே இருந்தது. கல்லூரி முடித்த பின் கிடைத்த காலங்கள் அருமையானவை. நான் புத்தகங்களை ரசித்து ருசித்து படிக்க தொடங்கிய நாட்கள் அவை. கிட்டத்தட்ட புத்தகங்கள் என்னுடன் என் படுக்கை அறையை பங்கு போட தொடங்கியிருந்த நாட்கள் அந்த நாட்கள். எல்லோரும் அப்போது உள்ளே வந்தனர். விவேகானந்தர் முதல், ஓஷோ முதல், உலகத் தலைவர்கள் முதல், சுஜாதா முதல், அசோகமித்திரன் முதல், டேல் கார்னகி முதல், பெரும் தொழில்சாலைகள் வெற்றி பெற்றது முதல், ஆனந்த விகடன் முதல் .... அனைத்தும் என் அறைக்குள் வரத் தொடங்கி இருந்தன. பின் புத்தா வந்தார். புத்தா வந்த பிறகு எல்லாவற்றிக்கும் ஒரு புது வடிவம் கொடுத்தார். எல்லாவற்றில் இருந்து விலகி, ஆனால் எல்லாவற்றையும் சிறப்பாக செய்ய சொன்ன புத்தா எனக்குள் மெதுவாக நுழைய ஆரம்பித்தார். இமயமலை என்னை அழைக்க ஆரம்பித்தது இங்கே தான். ஒரு யோகியாக மாறிவிடக்கூடிய மனநிலை அப்போது. ஏனோ தெரியவில்லை .. புத்தா இன்றும் எனக்குள் ஏதோ செய்வது நிஜம். நான் என்ற பிரமைக்குள் என்னை கூட்டி சென்று, நான் அற்ற என்னை கண்டறியச் செய்யும் அவர், என்னுடைய சிறந்த நண்பராக இருப்பதில் ஐயமில்லை. போதி மரம் சென்று, அங்கே கீழே அமர்ந்த போது இருந்த நான் தான், நான் விரும்பும் நான்.

பயிற்சியாளர் என்பது ஒரு புள்ளியில் சடேரென்று நிகழ்ந்து விடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நான் அதில் கவரப் பட்டேன். எனக்குள் இருக்கும் ஏதோ ஒன்று பயிற்சியாளருடன் சிறப்பாக இணையத் தொடங்கியதை நான் உணர்ந்தேன். என் உடல், உயிர், ஆன்மா

எல்லாம்....... பயிற்சியாளராக நான் இருந்த போது, வேறு ஒரு தளத்தில் செயல்பட்டதை நான் உணர ஆரம்பித்தேன். பனிரெண்டு மணி நேரம்
பயிற்சி கொடுத்தாலும் நான் அதே ஆற்றலுடன் பயணிக்க முடிந்தது எனக்கே ஆச்சர்யமே. என்னை பொறுத்தவரை, நான் கற்றுக்கொடுத்ததாக எல்லோரும் சொன்னாலும், ஒவ்வொரு பயிற்சியிலும் நான் கற்றுக்கொண்டதே உண்மை. என்னை நான் செதுக்க ஆரம்பித்து, சரியாக செதுக்கி விட்டதாக நினைத்து, இல்லை என உணர்ந்து, மீண்டும் செதுக்க ஆரம்பித்து .... இன்று வரை செதுக்கிக்கொண்டே இருக்கிறேன். இறப்பு வரை என்னை செதுக்கி கொண்டே இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன். யாராவது என்னை பயிற்சியாளர் என்று சொன்னால் எனக்கு சிரிப்பு வருகிறது உள்ளுக்குள். செதுக்கி கொண்டிருக்கும் பயிற்சியாளர் என்று சொல்வது கூட எனக்கு பொருந்த வாய்ப்பில்லை. கற்றுக்கொண்டிருக்கிறவர் என்று சொல்வதை என்னால் ஒத்துக் கொள்ள முடியும்.

பயிற்சியாளர் என்பது ஒரு இறை நிலை - என்னைப் பொருத்தவரை. அந்த நிலையில் இருந்து பேசும்போது, நிறைய உணர்தல் எனக்குள்ளும், பங்கேற்பாளர்களிடமும் ஏற்பட்டது. நிறைய சமயங்களில் ஏதோ ஒன்று உள்வந்து, வெளிவருவதை என்னால் உணர முடிந்தது. NLP பயிற்சியின் அறிவியல் புரிதலும், புத்தாவின் சிந்தனைகளும், இமாலய யோகிகளின் பார்வைகளும், அத்துணை புத்தகங்களின் பாட வீச்சும், யதார்த்த மனிதர்கள் எனக்கு கொடுத்த கன்ன அறை பாடங்களும் கலந்த கலவையாய் நான் இருப்பதால், என்னை புரிந்து கொள்ளல் கொஞ்சம் சிரமமே. புரிந்து கொள்ள முயற்சிக்காமல் பழக

ஆரம்பித்தால், புரிவது எளிது. [ மீண்டும் சொல்கிறேன் ... புரிந்து கொள்ள முயற்சிக்காமல் பழக ஆரம்பித்தால், புரிவது எளிது ! ]

இறப்பை பற்றிய ஒரு புரிதல் எனக்குள் வந்திருப்பதை முதிர்ச்சியின் அடையாளமாக பார்க்கிறேன். எவ்வளவு நாட்கள் இன்னும் இங்கே இருக்க போகிறேன் என்பது அவ்வப்போது எனக்குள் வந்து செல்லும் கேள்வி. அதற்குள் நான் நினைத்தவற்றை செய்துவிட வேண்டும் என்கிற அவாவும், செய்யாது போனாலும் ... முடிந்ததை செய்தேன் என்கிற எண்ண மீதமுமே எனக்கான சொத்து. சமீபமாக வாழ்க்கை பற்றிய என் பார்வை இன்னும் கொஞ்சம் மாறத் தொடங்கி இருக்கிறது, அநேகமாய் புத்தகம் எழுதி, வெளிவந்து, படித்தவர்கள் பின்னூட்டம் கொடுக்க ஆரம்பித்த பின்... நான் உலகின் குழந்தையாக மாறுகிறேன் என்கிற சிந்தனை எனக்குள் வந்திருக்கிறது. நான் இனி ஒரு குடும்ப குழந்தை அல்ல. என் உடல் என் இறப்பிற்கு பின் இருக்காது. என் எழுத்து என் இறப்பிற்கு பின் இருப்பாக இருக்கும் என நான் உணருகிறேன். தமிழ் புத்தகம் ஒன்று எழுத ஆரம்பித்து இருக்கிறேன். கூடிய விரைவில் வெளிவரும். நான் உபயோகப்படுத்தும் இரு மொழிகளிலும் புத்தகம் வருவது போதும் என படுகிறது எனக்கு. அதை அந்த மொழிக்கு நான் செலுத்தும் நன்றி நவில்தலாய் நினைக்கிறேன்.

அடுத்த சில மாதங்கள் என் வாழ்க்கையில் மிக மிக முக்கியமானவை என்று நான் உணர்கிறேன்.இந்த சில மாத நிகழ்வுகள் என்னை வாழ்க்கையின் இன்னொரு நிலைக்கு எடுத்து செல்லும் என எனக்கு தோன்றுகிறது . எனக்குள் அந்த நிலை என்னை நெருங்குவதை உணரவும் முடிகிறது.

*சமீபத்தில் எழுதிய கவிதை ஒன்றினை உங்களிடம்
சமர்ப்பிக்க நினைக்கிறேன்..*

*மழை பெய்யும் புள்ளியில்
இணையும் மண்
பெரும் மனதுடன்
தன்னை கொடுக்கும் மழை ...*

*மழை சிறியது
மண் பெரியது
என்கிற பேதம் எல்லாம் இல்லை...*

*இரண்டும் ஒன்றுக்கொன்று
எப்போதும் தேவை*

*அது போலவே நீயும் நானும் ...*

*விலகி சென்று வேறு இடத்தில்
அல்லது
என்னுடன் பயணித்து
பெய்தாலும் நீ மழையே ...
அங்கும் இங்கும் எங்கும்
உன் மண் நானே !*

*நான் எனப்படும் நான் ...*



நான் எனப்படும் நான் : 009

முதல் முதலாக புகைப்படம் எடுத்த போது, என் நண்பன் சொன்னான் ... " சரியா எடுக்கலைடா நீ ? பாதி முகம்தான் இருக்கு. மீதியை காணோம் ? " ... அப்போதுதான் புகைப்படம் என்று ஒன்றை பார்த்தேன். அதற்க்கு முன் வரை புகைப்பட கருவியை உபயோகிப்பதே பெரிய சாதனையாக நான் நினைத்திருந்தேன். புகைப்படங்களை கவனிக்க ஆரம்பித்தேன். புகைப்படங்கள் பொதுவாக சுவற்றில் தான் தொங்க வைக்கப்படுகின்றன. சுவற்றில் தொங்கும் புகைப்படங்கள் கிட்டத்தட்ட நம்மை கேள்வி கேட்கும் உயரத்தில்தான் இருக்கின்றன. தொங்கும் நினைவுகள் அவை. எங்களை மறந்து விடாதே என்பதே அந்த தொங்கும் நினைவுகளின் நிலையான கோரிக்கை. கருப்பு வெள்ளை புகைப்படங்கள் தான் என்னை முதன் முதலாக ஈர்க்க ஆரம்பித்தன. கருப்பு வெள்ளையில் கவனம் சிதறாமல் இருக்கும் வாய்ப்பு அதிகம். புகைப்படத்தில் இருக்கும் கண்கள் அவ்வளவு அழகாக பார்வையாளருடன்

இணையும்.

வண்ண புகைப்படங்கள் வர ஆரம்பித்த பின், வண்ணங்களின் கலவை என்னை கவர ஆரம்பித்தது. பிலிம் கேமராவில் படம் எடுக்க தொடங்கிய நான், பின்பு சோனி கேமராவில் படம் எடுக்க ஆரம்பித்தேன். பின் கேனான் காமெராவின் வரவு.

புகைப்படம் போல் ஒரு அருமையான நிகழ்வு இந்த உலகத்தில் இல்லை. அந்த ஒரு வினாடியில் நடக்கும் நிகழ்வு பதிவாவதை விட, இந்த உலகத்தில் வேறு என்ன சிறப்பாக இருக்க முடியும் ? ஒரு புகைப்படம் எடுக்கப்பட்ட பின் மீண்டும் அதே இடத்தில் எவ்வளவு வருடங்கள் காத்திருந்தாலும் இன்னொரு புகைப்படத்தை ஏற்கெனவே எடுத்து போல் எடுக்கவே முடியாது. உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. அதற்க்கான தடயம் தான் புகைப்படங்கள். ஒரு மனிதரின் அறுபது வருட வாழ்க்கை புகைப்படங்களாக மாறும்போது மனிதனிடம் ஏற்படும் மாற்றங்களை எளிதாக பார்க்க முடியும். சுருள் முடியுடன் இருக்கும் என் அப்பா, இப்போதைய புகைப்படங்களில் சுருள் முடியினை இழந்து சிரிக்கிறார். அறுபது வருட வாழ்வினை சில புகைப்படங்களில் விளக்கி விட முடியும் என்பதே புகைப்படங்களின் பலம்.

புகைப்படங்கள் எனக்குள் ஏற்படுத்தும் மகிழ் அதிர்வுகளை இன்னும் இந்த உலகில் வேறு யாரும், வேறு எதுவும் ஏற்படுத்தவில்லை. என்னுடைய சில புகைப்படங்களை நான் மீண்டும் மீண்டும் பார்த்திருக்கிறேன். என் புகைப்படங்களுக்கு நானே முதல் ரசிகன். நானே முதல் எதிரி.

காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை இருக்கும் புகைப்படங்களே என் சொத்துக்கள். அவை நான் இறந்த பின்னும், இங்கு வாழும். உங்களின் முகம் அதில் தெரியும்.



நான் எனப்படும் நான் : 010

என் நட்பு வட்டாரம் என்னுடன் பயணித்து கொண்டே இருக்கும். தெரிந்தோ தெரியாமலோ அந்த நட்பு வட்டாரங்களின் எதிர்பார்ப்பு தேடல் என் பயணங்களில் இருந்து அவர்களுக்கு கிடைப்பதை நான் உணருகிறேன்.

நிறைய நட்புக்களின் முதல் கேள்வி
" என்று உங்களுடன் நான் பயணிப்பது "என்பதே. என் முதல் பதில் 'எப்போது வேண்டுமானாலும்'. பயணங்களை போல் ஒரு உருவமற்ற ஆசிரியர் இந்த உலகில் யாருமில்லை. ஒரு பயணம் நிறைய தீர்வுகளையும் ஒரு சில புது சிந்தனைகளையும் கொடுக்கும் என்பது என் கணிப்பு. நட்பு வட்டாரத்தில் பலர் என்னுடன் பயணம் செய்திருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான அவர்களின் பயணங்கள் 'சுற்றிப் பார்க்க' என்று மட்டுமே இருந்து, பார்த்து முடித்தவுடன் விலகி செல்வதை என்னால் உணர

முடியும். அது ஒரு 'உபயோகப்படுத்தப்பட்ட' நிலை. அவர்களை நினைத்து சிரித்து சென்று விடுவது என் வழக்கம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதால் அவர்களால் நீண்ட நேரம் நடிக்க முடிவதில்லை. நட்பு வட்டாரங்களில் இன்னும் சிலர் உண்டு. என்னுடன் பயணித்து, பயணத்தினை முழுவதுமாக அனுபவிப்பவர்கள். அவர்களின் அடுத்த கேள்வி எப்போதுமே ... 'திரும்ப எப்போது செல்லலாம் ' என்பதே. இன்னும் வெகு சிலர் உண்டு. அவர்கள் மட்டுமே என் பயணங்களில் நான் என்ன கவனிக்கிறேன், உணருகிறேன் என்பதை நுண்ணிப்பாக கவனிப்பவர்கள். இவர்களின் சில கேள்விகள் என்னை வெகுவாக நேர்மறையாக பாதித்தது உண்டு.

அப்படி ஒருமுறை என்னுடன் பயணம் மேற்கொண்ட ஒருவர் என்னை கேட்டார்.

" களைப்பு என்பதே உங்களிடம் இல்லை. நீண்ட தூர பயணங்களில் பொதுவாக களைப்பும் ஒரு பகுதி. என் பார்வையில் நீங்கள் இயற்கையை ரசிப்பதால் களைப்பு அடைவதில்லையோ ?" என்று கேட்டார். ஆம் என்ற சிரித்த பதில் என்னுடையது அவருக்கு. அவரின் அடுத்த கேள்வி எனக்கு ஆச்சர்யமானது ...
" அது எப்படி இந்த வேகத்தில் செல்லும்போது திடீரென ஒரு இடத்தில் நிறுத்தி புகைப்படம் எடுக்க முடிகிறது உங்களால் ? நானும் அருகில் இருக்கிறேன். ஆனால் எனக்கு அந்த காட்சி நீங்கள் புகைப்படம் எடுத்த பின்பே தெரிகிறது " ...
நான் கொஞ்சம் யோசித்த கேள்வி இது. எப்படி என்று எனக்கும் தெரியவில்லை. வாகனம் ஓட்டும்போது கண்ணாடி வழி தெரியும் காட்சிகளை மனம் நொடி

நேரத்தில் அசைபோட்டு 'இது சிறப்பாக வரும்' எனும்போது நிறுத்தி புகைப்படம் எடுக்கிறேன் என எனக்கு தோன்றியது. நிறைய காட்சிகளை புகைப்படமாக எடுக்க முடியாமல் நான் செல்லும்போது மனது நமக்கு பிடித்த குழந்தையை விட்டு பிரிவது போல் வருத்தப்படும். ஏன் நிறுத்த முடியாமல் போனது என்று வருத்தப்படுவதும் உண்டு.

ஒருமுறை என்னுடன் பயணித்த பெண் நட்பு கேட்டது.
" ஏன் பயணங்கள் ? ஏன் ஒரே இடத்தில் இருந்து மனிதர்களை பார்த்து கற்க முடியாதா ? " நான் கொஞ்ச நேரம் யோசித்து சொன்னேன்.
" கற்கலாம். ஆனால் சூழ்நிலை ஒரே நிலையில் இருப்பதால், அதில் சவால்கள் இருப்பதில்லை. சூழ்நிலைகள் மாறும்போது சவால்களின் தன்மை வித்தியாசமாக இருக்கும். அது கொடுக்கும் பாடங்கள் வேறு ". "
ஏன் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பதில்லை ? " ...என்ற அடுத்த கேள்வி அந்த நட்பிடம் இருந்து வந்தது. " ஆரம்ப காலத்தில் இரு சக்கர வாகன பயணம் மட்டுமே. பின் நான்கு சக்கர வாகனம் வந்ததும் இதிலேயே பயணிப்பது என்பது பிடித்து போய்விட்டது என நினைக்கிறேன். இப்போது மீண்டும் இரு சக்கர வாகன பயணம் தொடங்க தோன்றுகிறது " ... "

ஏன் வாகனம் முழுக்க புத்தகங்கள் ? " ...

" தாமதமாகும் தருணங்கள் அனைத்தும் எனக்கு புத்தகம் படிக்கும் தருணங்கள். போக்குவரத்தில் நெரிசல் என்றால் வாகனத்தை ஓரமாக நிறுத்தி விட்டு படிக்க ஆரம்பித்து விடுவேன். சிறிது நேரம் கழித்து போக்குவரத்து சரியான பின் எப்போதும்போல் வாகனம் நகரும் "

" தனியாக பயணிப்பது ? "

" அது எனக்கான உலகம். நான் நானாக முழுமையாக இருக்கும் நேரம் அது மட்டுமே. விரும்பும் பாடல்கள் என்னுடன் பயணிக்கும் நேரங்கள் அவை. என் நினைவுகள் எப்போதும் கடந்த காலத்தில் வாழ்வதில்லை. பெரும்பாலும் 'அப்போதைக்கு நடந்த, நடக்கும், நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அசை போட்டவாறு நான் பயணிக்கும் காட்சி அது . அந்த உலகத்தை புரிந்து கொள்வது மற்றவருக்கு கொஞ்சம் சிரமம். எனக்கான நேரங்களில் தோன்றும் நிறைய யோசனைகள் பின்பு நிறைய நேர்மறை முடிவுகளை வாழ்க்கைக்கு கொடுத்திருக்கின்றன. என்னை பொறுத்தவரை, ஒரு மனிதன் தனியாக பயணிக்க வேண்டும். பிரச்சினைகளையும், மகிழ்வுகளையும் தனியாக சந்தித்து அதன் வீர்யத்தை உணர வேண்டும். அதுவே அவனுக்கு அவளுக்கு மன பலத்தை கொடுக்கும். இமய மலை பயணங்களில், நான் தனியாக நடந்து சென்ற நாட்கள் எனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகள் இன்னும்

ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. "

நான் பயணிக்கும்போது எந்த திட்டமும் வைத்துக்கொள்வதில்லை. 'எப்போது' என்ற கேள்விதான் எனக்கு மிகவும் சவாலான கேள்வி. திட்டமற்ற பயணங்கள் என் வாழ்வின் அஸ்திவாரம். அவையே எனக்குள் செங்கல் பாடமாய் நிற்கின்றன. அவைகளின் தாக்கம் எனக்குள் இருந்து கொண்டே இருக்கிறது. அவைகளின் அறிவுரைகள் எனக்குள் நிஜ வாழ்க்கையை கைகாட்டி கொண்டே இருக்கின்றன. அந்த பயணங்கள் எனக்கு கண்ணாடியாய் உள்ளே பதிந்து இருப்பதால், என் முன்னே நடிக்கும் மனிதர்களை 'எளிதாக' கண்டறிய முடிகிறது. அந்த மனிதர்கள் என்னுடன் நீண்ட காலம் பயணிக்க முடிவதில்லை என்பது எதார்த்த உண்மை. 'நடிப்பு' என்பது ஏன் என கேட்க தோன்றுகிறது எனக்கு. இதுதான் நான் என ஏன் சொல்ல முடிவதில்லை ? சில தகுந்த காரணங்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வெறும் நடிப்பு ? வன் எரிச்சல்.

என் பயணங்களில் பங்கு கொள்ள விரும்புபவர்களை வரவேற்கிறேன். [ சரஹாவில் அதிக கேள்விகள், நான் உங்களுடன் பயணிக்க வரலாமா என்பதே ! ] அப்படி வருபவர்களிடம் ஒரே ஒரு பார்வையை பதிய வைக்க விரும்புகிறேன். 'சுற்றிப் பார்க்க' என்னுடன் வர வேண்டாம். அப்படி வந்த கூட்டங்கள் எல்லாம் என்னில் இருந்து சில நாட்களில் தொலைந்து விடும். 'உங்களை பற்றி' நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் என்னுடன் பயணிக்கலாம். அந்த பயணம் உங்களின் முகமுடிகளை கிழித்து எரிந்து, நிஜ உங்களை உங்களுக்கு காட்டும். அதற்க்கு தயாரா ? உங்களுக்குள் நிறைய புது பரிமாணங்களை ஏற்படுத்தும்.

பயணம் தொடங்குபோது இருந்த நீங்கள் முடிவடையும்போது தொலைந்து இருப்பீர்கள். ஒரு புதிய நீங்கள் உங்களுக்குள் வலம் வரும். உங்களின் பேச்சு சிந்தனை யோசிக்கும் விதம் வேறு விதமாய் மாறி இருக்கும். இதற்க்கு நீங்கள் தயார் எனில் நீங்கள் என்னுடன் பயணிக்கலாம். என் இடப்பக்க இருக்கை உங்களுக்காக காத்திருக்கும். ஒரு நாள் பயணமோ அல்லது ஒரு மாத பயணமோ அல்லது ஒரு சில மணி நேர பயணமோ ... உங்களின் முகமூடியை கிழித்து எரியும் அந்த கணங்களுக்கு நீங்கள் தயாரா ?

ஆம் எனில் வரவேற்கிறேன்.